வடுவாவத்தை

# அருள்மிகு பத்திரகாளி அம்பிகை சமேத
# வீரபத்திர பெருமான் தேவஸ்தானம்



# மகா கும்பாபிஷேக மலர்


## 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடுவாவத்தை

# அருள்மிகு பத்திரகாளி அம்பிகை சமேத வீரபத்திர பெருமான் தேவஸ்தானம்



# மஹா கும்பாபிஷேக மலர்

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக பிரதமகுருவின்
# ஆசியுரை

**வே**ண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளிக்கும் வேழமுகத்து விநாயகனின் பாதார விந்தங்களை பணிந்து கொண்டு வடுவாவத்தை எனும் ஊரில் பல்லாண்டு காலமாக குடிகொண்டு தன்னை நாடிவருகின்ற அடியவர்களுக்கு வேண்டும் வரங்களை அளிக்கும் பத்திரகாளி அம்பிகை சமேத வீரபத்திர பெருமானுடைய மகா கும்பாபிஷேகமானது 21.03.2022 அன்று சுவாதி நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய நன்னாளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. கும்பாபிஷேகத்தினை சிறப்பிக்கும் வகையில் சிறப்பு நூல் ஒன்று வெளியிடவுள்ளனர். அந்த வகையில் அந் நூலானது சிறப்பான வகையில் அமைய வேண்டும் என பிரார்த்திப்பதோடு இவ் கும்பாபிஷேகத்தினை மிகவும் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த அரசன் அண்ணா அவர்களுக்கும் மற்றும் அடியவர்களுக்கும் திருப்பணி தொண்டுகளை மேற்கொண்ட அடியவர்களுக்கும் மற்றும் உபயகாரர்களுக்கும் எல்லாம் வல்ல வீரபத்திர பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டுவதோடு எனது நல்லாசியையும் வழங்குகிறேன்.

சுபம்

**"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க."**


**சிவஸ்ரீ.சு.வித்தியாபரக் குருக்கள்,**
பிரதமகுரு– நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையார் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் வணக்கம்

விநாகயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே.

# திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

# திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதையுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ்சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்த
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

## திருப்புகழ்

கருத்தினால் விரகு செய் மடமாதர்
கலக்குமோ கனமதில் மருளாதே
ஒருத்தனாம்வகை திரு வருளாலே
உணர்ந்து நாளடிமையு முடையோனே
பருத்ததோகையில் வருமுருகோனே
பறக்கவே இயல்தெரி வயலூரா
திருத்தமாதவர் புகழ் குருநாதா
திருக்கை வேழகிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலோலி வடுவாவத்தை ஸ்ரீவீரபத்திரர் சுவாமி கோயில்

## காப்பு

வளம்சேர் பரிமளக் காவெழில் சேர்வடு வாவத்தைவாழ்
குளஞ்சேர் விழியுடை வாள்விரன் மேற்றுதி கூறுதற்குத்
தளஞ்சேர் முண்டக வாவியுஞ் சீருந் தயங்குபரி
மளஞ்சேர் முறாவிற் பதிவாழ் கணேசனை வாழ்த்துவமே

## நூல்

1) அருமறை போலச் சிரமும் மதற்கிரண் டானகையும்
பெருவிழி மும்மடங் கோடு துலங்கும் பெருந்தம்பிரா
னருளுரு வைச்சிறி யோங் காணச் சுத்த வருளளிப்பாய்
திருவளஞ் சேர்வடு வாவத்தை வாழ் பெருந் தெய்வதமே

2) ஆதிப் பிரானு முமையும் பணித்த வருளுரையா
போதித் திறமறி யாத வயன்மக னும்பருடன்
பேதிக்க வாற்ற பிழைக்குயர் தண்டமும் பின்மகமுஞ்
சேதித்தவா வடுவாவத்தை வாழ் பெருந் தெய்வமே

3) இரண்ஞ் செய்தேவரு வோருடல் கீறி யிரத்த முண்ட
விரணஞ் செறி நர சிங்கத்தின் றோலை விரித்துடுத்துக்
கிரணஞ் செறியுத்த ரீயமு மாக்கிக் கெறுவடக்கித்
திரணஞ்செய் தாய்வடு வாவத்தைவாழ் பெருந்தெய்வதமே

4) ஈரேழுலுக புவன மனைத்திறகு வெவ்வுயிர்க்கும்
பேராள னாக விருந்தருள் செய்யும் பெருந்தம்பிரான்
நேராக நின்னொப் பவரிலை யெங்களை நீயிரட்சி
சீராள னேவடு வாவத்தை வாழ்பெருந் தெய்வமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) உத்தமோங் காரத் துயர்சிர சானவ வோர்தலின்றி
யெத்தின முந்துய ராம்மெலிந் தோமெமக் கின்னருளாற்
பத்திமை யோடு பரம சுகம்பெறப் பாங்கிப்பாய்
சித்தி தரும்வடு வாவத்தை வாழ்பெருந் தெய்வமே

6) ஊக்கம் பெருகரி யோனுநின் சிற்குண மோர்ந்தறியான்
வாக்கின் றவனுநின் சாரதி யாகி மகிழ்வடைந்தான்
மேக்கின் றிருவருள் செய்தடி யேங்களின் மிக்கபவந்
தீக்கின்ற வாவடு வாவத்தை வாழ்பெருந் தெய்வதமே

7) எந்தையு மாயுமெம் மொக்கலு மாகியிருந் தெங்களை
வந்தனை செய்யும் வரந்தந்து மேக்குயர் வாழ்வளிப்பா
யிந்த நிலத்தவ ரன்றியெவ் வண்டமு மேத்திநிதஞ்
சிந்தனை செய்வடு வாவத்தை வாழ்பெருந் தெய்வமே.

8) ஏசுங்கொடிய சமன்வந் தெமைக்கொள வெண்ணுமுன
நேசங் கொடேதொழும் பேறெனக் கீந்து நினதருளாம்
வாசங் கொடே பத மென்னுமெய்ப் பேறு வழங்கியருள்
தேசந் தொழும்வடு வாவத்தை வாழ்பெருந் தெய்வமே

9) ஐவகை யாள ரலைக்கநொந் தோமெமக் கார்துணைநீ
யுய்வகை யானவுபாய முணர்த்தி யுனதருளும்
பொய்வகை தீரும் புனிதவுணர்ச்சியும் போதமுந்தா
தெய்வீக மாவடு வாவத்தை வாழ்பெருந் தெய்வதமே

10) ஒருபொரு ளானவ வொன்னலர்க் காய்தவ வேதியர்க்குந்
தெரிவரி தானள தேவர்க்குந் தேவ சிவன் புதல்வ
பரிவுறு சீர்மலி பத்திரை நாயக பார்த்தருளாய்
திருவருள் மேல்வடு வாவத்தை வாழ்பெருந் தெய்வதமே

11) ஓரா தவர்க்கரி தாகியு மன்பர்க் குறுதுணைவா
கூரார்ந்த வாட்கர சர்ப்பா பரண குணநிர்க்குண
பாரார்ந்த போக பரமளித் தீகுவை பண்பெனக்குச்
சீராந் துயர்விடு வாவத்தை வாழ்பெருந் தெய்வதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) ஔவிய நெஞ்சத் தவரான் மெலிந்தயர்ந் தேமவரைக்
கவ்விய மாமய நீர்த்திரட் சித்தல் கடனுனக்குப்
பவ்வ நிறைப்பரி புரணவாண்டுன் பதமருள்வாய்
செவ்விய நேர்வடு வாவத்தை வாழ்பெருந் தெய்வதமே

## பத்திரகாளித் தேவி துதி

உலக மனைத்தையு மீன்றவெம் மன்னையி னுற்பவித்து
நலமிகு மன்பர்க் குறுதுணை யாகமுன் னாட்புலோலித்
தலமதி லேயுறை வீரற் குரிய தலைச்சத்தியாம்
வலமிகு பத்திரை யாந்தேவி பாதம் வணங்குவமே

## வாழி

பொன்முகில் வாழி புலம்வாழ மாவளம் கொங்கிமிக
மன்மிக வாழி யறம்வாழி மாதவ மாமறைகோ
தன்னினம் வாழி யுயர்வைசம் வாழிநின் சார்ந்தவன்பர்
சின்மயம் வாழ்வடு வாவத்தை வாழி தினநிறைந்தே

**********

## வீரபத்திரர் சுலோகம்

முக்கண்ணும் சடைமுடியும் வாளும் கொண்ட
மூவேழு உலகும் போற்றும்
செக்கல் மால்மகுடி இடர்பால் ஓங்க
சிரமம் சிரைப்ப சேய் பால் ஓங்க
உக்கிரம் மூர்த்தி என்னும்
உயிர்த்த மாகாளியோடு
ஆடல் கொண்ட விக்கிரம வீரனே
எம் வினை வேர் அறுக்கும்
வீரபத்திர தேவனே

தொகுப்பு : ச.பாலசந்திரன்
சரஸ்வதி இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்புலோலி வடுவாத்தை ஶ்ரீ வீரபத்திரப் பெருமான் மீது சைவசித்தாந்த
பண்டிதர் சிவாகம உபதேச வாசஸ்பதி , சிவாகம பூசணம்
சிவஸ்ரீதியாகசோமஸ்கந்த ராஜாக்குருக்கள் M.A
அவர்கள் பாடி உவந்தளித்த

# திருவூஞ்சற்பாக்கள்

செந்தமிழும் சிவமதமும் தெளிந்த சிந்தைச்
சீரியர்வாழ் தென்புலோலிப் பகுதியாங்கே
கந்தமுறும் வடுவாவத்தைப் பதியில் மேவும்
கருணைமிகு வீரபத்திர தெய்வம்மேலே
சந்தமுறும் திருவூஞ்சல் தமியேன் பாட
சங்கரனார் முதற்சேயாய் வந்துதித்த
தந்திமுகா புற்றளையிற் பெருமானுன்றன்
சரணமலர்ப் பாதந்தான் காப்பதாமே

01. பொன்மருவு நால்வேதம் தூண்களாக
பொலிவுநிறை சிவாகமமே விட்டமாக
மன்னுமொழிக் கலைஞானம் கயிறதாக
மாண்புமிகு ஓங்காரம் பீடமாக
வண்ணமெழிற் தங்குமூஞ்சல் தனிலேவைகும்
வரமருளுந் தந்தையென வந்ததேவே
நன்னகராம் தென்புலோலி வடுவாவத்தை
நல்வீர பத்திரரே – தேவியோடாடீரூஞ்சல்

2. பயபக்தி எனும்பவளக் கால்நிறுத்தி
பஞ்சபுலன் இணைத்தொன்றாய் விட்டமாக்கி
உயர்நான்கு கரணவடக் கயிறுமாட்டி
உவந்ததிரு வருளென்ற பலகைதேக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயமான முத்தியெனும் ஊஞ்சல் ஆட
நற்தலத்தில் வந்தெமக்கு அருளும் தேவே
வயல்மரஞ்சூழ் தென்புலோலி வடுவாவத்தை
வாழ்வீர பத்திரரே – தேவியோடாடீரூஞ்சல்

3. கருவண்ணத் திருமேனி ஆட , ஆட
கழல்தண்டை விரிசடையும் ஆட, ஆட
அருள்பூக்கும் திருநயம் ஆட, ஆட
அரியகரும் செம்பட்டு ஆடை ஆட
திருவிளங்கும் ஈர்நான்கு கரங்களாட
திழைத்திடுனல் லிதழ்முறுவ லாகஆட
யெருவூராம் தென்புலோலி வடுவாவத்தைப்
பெயர்வீர பத்திரரே – தேவியோடாடீரூஞ்சல்

4. சிரமீதில் அணிந்தமணிக் கிரீடம்ஆட
செங்கையணி கனகவீரக் கழல்களாட
உரகவணிக் குண்டலங்கள் செவியில் ஆட
உயர்வைர நுதற்பட்டை ஆட ஆட
வரமருளும் கரம்அபய வரதம் ஆட
வண்டாடச் செண்டாட வீரம்ஆட
பரமசுதா தென்புலோலி வடுவாத்தை
பெருவீர பத்திரரே – தேவியோடாடீரூஞ்சல்

5. முத்தலைய சூலங்க பாலம் பாசம்
முழக்கினிய டமருகமும் முறைகைக்கொண்டு
சித்திரமார் சதங்கையிரு தாளிற் பூண்டு
தினகரனக் கினிமதிமுக் கண்களாக
எத்திசையும் சுவாலை விடும் கணங்கள்சூழ
எழுந்திருக்கும் திருக்கோல மதுவுங்காட்டி
சுத்தசிவ வேடஅருள் வடுவாத்தை
சிற்பரனே வீரபத்திரரே – தேவியோடாடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பெருமையினர் எனும்பெரிய தவத்தார்சைவப்
பெரியரவர் உறவினரே டயலார்தாமும்
உரிமையுடன் விளக்கேற்றிப் பூசைசெய்ய
உற்பவித்தாய் அவர்கனாவிற்கு காட்சிதந்தே
அரசுடனெ வேம்பாலும் ஒதியும்சூழ
அழகுடனே அமர்ந்தவர்க்கு அருள்புரிந்த
பெரியதம்பி ரானானாய் வடுவாவத்தைப்
பெயருடையாய் வீரபத்திரரே –தேவியோடாடீரூஞ்சல்

7. மாதவஞ்சேர் தேவர்களைக் கொண்டேஅன்று
மாதக்கன் மாமகத்தைச் சங்கரிக்க
பூதகணம் புடைசூழ வாளும் ஏந்தி
புல்லரக்கன் வல்லசுரர் களையும் மாய்த்து
நாதனவன் ஏவலினால் வந்ததேவே
நற்றவத்தோர்க் கினியவரம் அருளும் வீரா
பாதகம லம்பணிந்தோம் வடுவாத்தைப்
பரமசுதா வீரபத்திரரே – தேவியோடாடீரூஞ்சல்

8. வைரவியார் பெருமையினர் என்றேபக்தி
வகைப்பூசை தனைப்புரிய வைத்தேஆண்டாய்
கையிரண்டா யிரந்தலைக ளாயிரமும்
கொண்டபெரு வடிவத்தைக் காட்டா நின்றாய்
மையிருண்ட கண்டனவ னுருவாயிங்கே
மகிழ்ந்துகரு ணைக்கடலாய் வரங்களீய
தெய்வமென அருளுருவாய் வடுவாவத்தைத்
திருவீர பத்திரரே – தேவியோடாடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வானட வெளியாட அங்கிஆட
வெளியாட நிலமாட மதியும் ஆட
வானோடு பகல்ஆட உடுக்கள் ஆட
மண்ணவரும் விண்ணவரும் மகிழ்வில்ஆட
அனவிட வீரபத்திரர் ஆடகாளி
அருகாகி அன்போடும் ஆட ஆட
தானாட தொழுமடியார் வடுவாவத்தை
தனிவீர பத்திரரே – தேவியோடாடீரூஞ்சல்

10. திரிபுவன நாயகரே ஆடீர்ஊஞ்சல்
தீவண்ண மேனியரே ஆடீர்ஊஞ்சல்
அரியிரம ரூபரே ஆடீர்ஊஞ்சல்
ஆதிபர மேஸ்வரரே ஆடீர்ஊஞ்சல்
பரிவுடைய வீரபத்திரா ஆடீர்ஊஞ்சல்
பார்முழுதும் ஆனவரே ஆடீர்ஊஞ்சல்
வரியரசால் மரநீழல் வடுவாவத்தை
வீராதி வீரபத்திரா – தேவியோடாடீரூஞ்சல்

## வாழி

பருவமழை பெய்துவானும் நிலனும் வாழி
பயனுதவி பயிர்வகைகள் பரந்து வாழி
தருமமுயர் நீதிநெறி தழைத்து வாழி
தமிழ்மொழியும் சிவமதமும் சிறந்துவாழி
திருநீறும் கண்டிகையும் செழித்து (சிறந்து) வாழி
திசைதோறும் மெய்யடியார் செறிந்து வாழி
அருளுடையார் பெருகிடுமூர் வடுவாவத்தை
அருள்வீரர் பத்திரையோ டமர்ந்து வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

அருளாளன் ஐந்துகர விநாயகர்க்கு மங்களம்
ஆதிசிவன் பார்பதியாம் அம்பிகைக்கு மங்களம்
இருளகற்றும் ஒளிஞான வேலவர்க்கு மங்களம்
ஈசனுமை பாலகனும் வைரவர்க்கும் மங்களம்
உருவருவாய் உள்ளவீர பத்திரர்க்கு மங்களம்
ஊனிலுறை பத்திரையாம் அன்னையர்க்கு மங்களம்
எங்களையே காக்குமெழில் நாரணர்க்கு மங்களம்
எங்களிறை வீரபத்திர தேவர்க்கென்றும் மங்களம்
திருமகளின் நாயகநா ராயணர்க்கு மங்களம்
தூயவீர பத்திரநல் லடியவர்க்கு மங்களம்

## போற்றி வீரபத்திரர்

சூலமும் வீரவாளும் சுடர்விடு கதையும் கொண்டே
ஆலமே எழுந்ததேபோல் அயன்மகன் தக்கன் முன்னே
ஞாலமே வெருவக்கண்கள் நெருப்பெழச் சீறிநின்ற
கோலமே நீங்கிஞானக் கடவுளாய் நின்றாய் போற்றி!

பெரியதம் பிரானாய் நின்றாய் பேருரு வதனைநீக்கி
அரியயன் தேடிக்காணா அரனுரு வானதேவே
சிறியநம் பூசையேற்று தொண்டரென் றெம்மையாக்கி
அரியநல் வரமீந்தாளும் அரன்சுதா போற்றி! போற்றி!

**********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலோலி வருவாவத்தை அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம்

### காப்பு

**வ**ளஞ்சேர் பரிமளக் காவெழில் சேர்வடு வாவத்தை வாழ்
குளஞ்சேர் விழியுடை வாள்விரன் மேற்றுதி கூறுதற்குத்
தளஞ்சேர் முண்டக வாவியுஞ் சீருந் தயங்குபரி
மளஞ்சேர் முறாவிற் பதிவாழ் கணேசனை வாழ்த்துவமே.

### நூல்

அருள்மறை போலச் சிரமு மதற்கிரண் டானகையும்
பெருவிழி மும்மடங் கோடு துலங்கும் பெருந்தம்பிரா
னருளுரு வைச்சிறி யேங் காணச் சுத்த வருளழிப்பாய்
திருவளஞ் சேர்வடு வாவத்தை வாழ் பெருந் தெய்வதமே.

**ஈ**ழத்திருநாட்டின் வடபால் பனைவளம், மண்வளம், கடல்வளம் ஒருங்கே அமையப்பெற்ற யாழ்ப்பாணத்தின் கிழக்குத்திசையில் வடமராட்சியில் அமைந்துள்ள பருத்தித்துறையில் புலோலி எனும் சிற்றூரில் தென்புலோலியிலே வருவாவத்தை எனும் பதியில் இற்றைக்கு இருநூறாண்டு காலத்திலிருந்தே எம்முன்னோரால் குலதெய்வமாகவும், இடர்கள் வரும் போது காத்தருளும் தெய்வங்களாகவும் சிறு கொட்டில் அமைத்து பயபக்தியோடு வழிபட்டுவந்த இவ்வாலயம் காலகிரத்தில் இவ்வூர் அடியவர்களின் பங்களிப்போடு காலத்துக்கு காலம் முறையே மூலஸ்தானம், அர்த்தமண்டபம், தரிசனமண்டபம், மகாமண்டபம், தம்பமண்டபம், வசந்த மண்டபம், மணிக்கூட்டு கோபுரம் அமைக்கப்பெற்று பூரண ஆலயமாக திகழ்ந்தது.

இருந்தபோதும் 2008ம் ஆண்டளவில் தரிசன மண்டபத்தில் பாரிய வெடிப்பு ஏற்பட்டதோடு, தெற்குபுற சுவர்களும் மிகவும் பதிவாகவும் ஆலயத்திற்கு பொருத்தமில்லாமலும் இருந்தது. இவற்றைக் கருத்திற்கொண்டு 2008ம் ஆண்டு இறுதியில் ஒரு குழு அமைத்து 2009ம் ஆண்டு தைமாதம் பாலஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டு அர்த்த மண்டபம் தொடக்கம் முறையே தரிசனமண்டபம், மகாமண்டபம் என்பன முற்றுமுழுதாக அத்திபாரம் தோண்டி எடுக்கப்பெற்று புதிதாக அத்திபாரமிடப்பட்டு செவ்வனே நிறைவேற்றப் பட்டது. அத்துடன் தெற்குப் புற சுற்றுக்கொட்டகை தூண்கள் மிகவும் பதிவாகவும் ஆலய அமைப்புக்கு முரணாகவும் இருந்தது. ஆகவே தூண்கள் $3\frac{1}{2}$ அடிவரை உயர்த்தப்பட்டு பக்கசுவர்களும் உயர்த்தப்பட்டு புதிதாக கூரை அமைக்கப்பட்டது. அத்துடன் பிள்ளையார் மூலஸ்தானம், மடப்பள்ளி, களஞ்சிய அறை என்பனவும் புதிதாக அமைக்கப்பட்டதோடு மணிக்கூட்டு கோபுரமும் 4 அடிவரை உயர்த்தப்பட்டு, இத்திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு விரோதி வருடம் ஆவணித்திங்கள் 2ம் நாள் 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது. இக்கைங்கரியத்திற்கு பல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எம்பெருமாள் தேவி அருள் கிடைக்குமென்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நிற்க முதல் கும்பாபிஷேகம் நடைபெற்று 10 முதல் 12 வருடங்களில் மறுகும்பாபிஷேகம் நடைபெற வேண்டியது நியதி இதற்கேற்ப ஆலய பரிபாலகரினால் 19.03.2020ல் ஓர் ஆலோசனை கூட்டம் இடம்பெற்று அதில் பின்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

1) வசந்தமண்டப கூரை மரங்கள் பழுது பட்டிருப்பதாலும் பீடத்திற்கும் பின்சுவருக்குமிடையில் அடிக்கடி கறையான் புற்றெடுப்பதாலும் அதனை முற்று முழுதாக கொத்தி இடித்து கட்டுவதென்றும்
2) தம்ப மண்டப நிலத்தில் நீளத்துக்கு வெடிப்பு ஏற்பட்டிருப்பதால் அதனை முழுமையாக கொத்தி புதிதாக நிலம் போடுதென்றும் (வசதி ஏற்படின் தறோச பதிப்பது)
3) வசந்தமண்டப முன் கூரையிலிருந்து வடக்குபக்க சுற்றுக் கொட்டகையை தீர்த்தக் கிணற்றடி மட்டும் போடுவதென்றும்
4) மடப்பள்ளி, களஞ்சியஅறை, மா மண்டபம் முதலியவற்றிற்கு லெவல் சீற் அடிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கேற்ப முதலில் வசந்தமண்டபத்தை கட்டி முடிப்பதென்றும் அத்தோடு வெளிவேலைகள் அதாவது தம்ப மண்டபத்துக்கு நிலம் போடுதல் கிணற்றடி மட்டும் சுற்றுக்கொட்டகை அமைத்தல் வெளி வர்ணபூச்சு வேலைகள் செய்து முடித்தபின் பாலஸ்தானம் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி விகாரி வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனித்திங்கள் 7ம் நாள் 20.03.2020 திங்கட்கிழமை வசந்த மண்டபத்துக்கு நாள் அத்திபாரமிடப்பட்டது. ஆனால் இடையில் கொவிட் 19ன் தாக்கத்தினால் வேலைகள் ஆமை வேகத்திலேதான் இடம்பெற்றது. இருப்பினும் சார்வரி வருடம் பங்குனித்திங்கள் 2ம் நாள் 15.03.2021 திங்கட்கிழமை பாலஸ்தானம் செய்யப்பட்டு சகல வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு நிகழும் பிலவ வருடம் திங்கட்கிழமை 7ம் நாள் 21.03.2022 அதிகாலை 6.22 மணிக்கும் 7.40 மணிக்குமிடையில் உள்ள சுபவேளையில் மிகவும் சிறப்பாக நிறைவேறியது. இத்திருப்பணிக்கு பல வழிகளிலும் பங்களிப்பு நல்கிய அனைவருக்கும் எம்பெருமாள் தேவி அருள்புரிவார்களாக நிற்க.

இற்றைக்கு எழுபது வருடங்களிற்கு முன் இந்த ஆலயத்தில் நடந்தவை பற்றி நினைவுபடுத்தி பார்க்கலாம் என எண்ணுகிறேன். அந்நேரத்தில் தற்போதுள்ளது போன்று மண்டபங்கள் கிடையாது. இங்கு நடைபெறும் உற்சவங்களில் ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் வரும் அபிஷேகம் தான் மிகவும் சிறப்பானது. இவ்வூர் அடியவர்கள் ஒன்றுகூடி செய்யும் உற்சவம். இங்கு பக்தி மார்க்கமாக பூசை இடம்பெறும். உற்சவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே இதற்கான ஆயுத்தங்களை செய்வார்கள். அதாவது தரிசன மண்டபத்திலிருந்து தம்ப மண்டப வரையிலான நீளத்துக்கு முதலில் பந்தல் போடுவதற்கான ஆயத்தங்கள் இடம்பெறும். பந்தல் அமைத்து அவ்வளவு நீளத்திற்கும் கிடுகினால் தான் வேய்வார்கள். அடுத்தபடியாக தேவையான பழவகைகள் சேமிக்கும் வேலைகள் ஆரம்பமாகும். அதாவது முதலில் ஊரிலுள்ள மாம்பழங்களை சேமிக்கும் வேலை இடம்பெறும். மரங்களில் உள்ள முற்றிய காய்களை சேமிப்பார்கள். அவை மடைக்கு போதுமானதாக இருக்காது ஆகவே மிகுதி பழங்களை பெற்றுக் கொள்வதற்கு கொடிகாமம், சாவகச்சேரி, சுன்னாகம் சந்தைகளுக்கு சென்று வாங்கி வர முடிவு எடுப்பார்கள். அதன்படி தற்போது உள்ளது போல் அக்காலத்தில் வாகன வசதியிருந்ததில்லை. மாட்டு வண்டியே சகலதுக்கும் உதவியது. சந்தை கூடும் நாளைப் பார்த்து ஒவ்வொரு வண்டில் செல்லும் மாம்பழம் வாங்குவதென்றால் கொடிகாமத்துக்கும், பலாப்பழம் வாங்குவதாயிருந்தால் சாவகச்சேரி சந்தைக்கும் செல்வார்கள். சிலவேளைகளில் வாழைக்குலை வாங்குவதற்கு சுன்னாகத்துக்கு இரு வண்டில்கள் செல்லும். மாம்பழம் அண்ணளவாக ஆயிரமும் பலாப்பழம் எழுபத்தைதந்து எண்பதும் வாழைக்குலை அறுபதுக்கு குறையாமலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குவார்கள். இதைவிட குடத்தனையிலிருந்து அடியவர்களால் மூன்று வண்டில் நிறைய இளநீர் கொண்டு வருவார்கள். கொள்முதல் செய்து வந்த பழங்கள் குறிப்பிட்ட நாளில் பழுக்காது என்று அனுபவவுள்ளவர்கள் கண்டறிந்தால் பத்து. பன்னிரண்டு அடி சதுரத்தில் 3, 4 அடி ஆழத்தில் கிடங்கு வெட்டி 3 நாளைக்கு முன்பே பழங்களை அடுக்கி காற்றுப்போகா வண்ணம் இரண்டு மூலையில் பாவைக்குள் வைக்கோல், வேப்பிலை இட்டு 3 நாட்கள் புகை போடுவார்கள். அபிஷேகத்திற்கு முதல் நாள் 4 மணியளவில் கிடங்கில் போடப்பட்ட பொருட்கள் யாவும் வெளியே எடுப்பார்கள்.

நிற்க, இது இப்பிடி நடைபெற இளையோர் பந்தல் அலங்கரிப்பதில் ஆர்வமாக செயல்படுவர். வாழைமரம் வெட்டி வருபவர்கள் ஒருபுறம், சவுக்கு வெட்டி வருபவர்கள் ஒருபுறம் கமுகு ஓலையென சகலவற்றை கொண்டு வந்து சோடிப்பார்கள். இத்தனைக்கும் அந்த நீளபந்தலுக்கு தேவையான தோரணத்தை வயது முதிர்ந்த பெரியவர்கள் பின்னிக் கொடுப்பார்கள்.

நிற்க அபிஷேகத்தினமான அன்று அதிகாலையிலே உற்சாகமும் கரைபுரண்டோடும் காலையிலேயே நான்கு பறை மூன்று தம்பட்டம் என முழக்கத் தொடங்குவார்கள். அந்த ஓசையிலேயே வேலைகள் மிக உற்சாகமாக நடைபெறும். வாழைக்குலைகளை சீப்பாக்கி காம்பு பார்ப்பவர்கள் ஒருபுறம், மாம்பழத்தினை துப்பரவு செய்பவர்கள் ஒரு புறம் என ஒவ்வொருவரும் தமக்கான வேலைகளை செய்து முடிப்பார்கள். அத்தோடு ஆலய தெற்கு வீதியில் இரு பெரிய ஆலமரங்கள் நின்றன. அதற்கு கீழ் அறுபது எழுபது பானைகள் அடியவர்கள் பொங்கல் செய்வார்கள். மறுபுறம் குடத்தனையிலிருந்து மூன்று வண்டில்களில் கொண்டு வந்த இளநீர் கும்பியை சுற்றி நான்கு ஐந்து பேர் வெட்டுவர்கள். இதற்கிடையில் இங்கு தீக்குளிப்பு வைபவமும் இடம்பெற்று வந்தது. முதல் நாள் இரவு 7 மணியளவில் விறகு அடுக்கி தீ மூட்டி விடுவார்கள். அதிகாலை மூச்சம்பலம் சிவன் ஆலயத்திலிருந்து க.வல்லிபுரம் எனும் அடியாரினால் அடியவர்கள் புடைசூழ காவடி எடுத்து வந்து தீக்குளிப்பு நிகழ்வு இடம்பெறும். முதலில் அவர் தீயில் இறங்கியதும் அவரைத் தொடர்ந்து அடியவர்கள் தீமிதிப்பார்கள். இது இப்படியிருக்க காலை 10 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மணிக்கணக்கில் செல்லும் அதன்பின் மடை பரவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆரம்பிப்பார்கள். சிலர் மற்றைய பழங்களை பரவ நான்கு ஐந்து பேர் பலாப்பழத்தை கீறுவார்கள். மூலஸ்தானத்திலிருந்து பந்தல் நீட்டுக்கு முதலில் வாழைப்பழம் அடுத்து மாம்பழகும்பி அடுத்து வாழைப்பழம் இப்படியே மாறி மாறி பரவிக் கொண்டே வருவார்கள். கீறிய பலாப்பழத்தை நீட்டுக்கு இருபுறமும் பரவுவார்கள். மடை பரவி முடிந்ததும் பூசை ஆரம்பமாகும். மண்ணாலான பெரிய கற்பூரத்தட்டில் நிறைய விளைவு கற்பூரமிட்டு பூசை செய்பவர் பற்ற வைப்பார். தொடர்ந்து நீளத்துக்கு மடைக்கு இருபக்கமும் வாழை தடலில் வைக்கப்பட்ட கற்பூரங்கள் ஏற்றப்படும். வெளியில் பறை முழங்கிக் கொண்டேயிருக்கும் அதேவேளை ஒரு சிலர் உருவந்து ஆடுவார்கள். அதில் முக்கியமானவர் நாங்கள், வல்லியப்பா என்று வாஞ்சையோடு அழைக்கும் க.வல்லிபுரம் என்பவர் மூலஸ்தானத்தில் ஏற்றிய கூடம் 15, 20 நிமிடம் வரை எரியும். அது அணையும் வரை பறை முழங்கிக் கொண்டேயிருக்கும். பூசை முடிந்து விபூதி பிரசாதம் வழங்கும் நிகழ்வைத் தொடர்ந்து பழவகை பங்கிடும் நிகழ்வு இடம்பெறும். அதாவது பணம் வழங்கிய ஒழுங்குப்படி பங்கிட்டு வழங்கப்படும். என் போன்ற 4 , 5 சிறுவர்களிடம் பணம் வழங்கியவர்களின் பெயர் அடங்கிய புல்ஸ்காப்பேப்பர் வழங்கப்படும். நாங்கள் சிறுவர்கள் பெயரினையும், தொகையினையும் வாசிக்க பெரியவர்கள் அதற்கேற்ப பங்கிட்டு கொடுப்பார்கள். இங்கு வேள்வி அதாவது அபிஷேகம் முடிந்து கதவு சாத்தி விட்டு வந்தால் எவரும் ஆலயபக்கம் செல்லமாட்டார்கள். சில வேளைகளில் அங்கு பூசை நடைபெறுமாப்போல் சத்தம் கேட்டதாகவும் எனது பேரன் வைரவப்பிள்ளை அப்பா சொன்னது இப்பவும் ஞாபகதிலுள்ளன.

நிற்க, இந்த ஆலயத்திற்கு பூசை செய்து வந்த பெரியவர்களை நினைவு கூருவோம்.

| | |
|---|---|
| பெருமையினர் | பெருமாள் அப்பா |
| பெ.வைரவப்பிள்ளை | வத்தகன்வளவு |
| வை.வீரபத்திரபிள்ளை | வத்தகன்வளவு |
| வை.பெருமையினார் | (சின்னத்துரை) வத்தகன்வளவு |
| வை.மாப்பாணர் | இவர் அரச உத்தியோகத்திலிருந்தபடியால் பூசையில் பங்குபற்றக்கூடிய சூழ்நிலையில் இல்லாத போதும் ஆலயத் தொண்டிலும், ஆலய வளர்ச்சியிலும் பெருந்தொண்டாற்றிய பெருந்தகை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வளர்ச்சியிலும், தொண்டுகளிலும் ஈடுபட்ட பெரியவர்கள்

| | |
|---|---|
| வி.சேனாதிசேகரம் | பிரசித்த நொத்தாரிசு |
| க.வல்லிபுரம் வல்லியப்பா | கொம்பியா ஒல்லை |
| க.இரத்தினசிங்கம் | பெரியபருத்தி |
| வ.ஆ.செல்லையா | குருவிச்சானை |
| க.ஆழ்வாப்பிள்ளை | துட்டாங்காணி |
| க.முருகேசு | முறண்டியாவளவு |
| க.சின்னையா | ஆவரம்பிட்டி |
| க.வேலுப்பிள்ளை | ஆவரம்பிட்டி |
| க.சிதம்பரப்பிள்ளை | பரியாரியார்வளவு |
| க.வேலுப்பிள்ளை | சின்னத்தாய் |
| மு.க.சபாரத்தினம் | குருவிச்சானை |
| சே.ஏகாம்பரநாதன் | நொத்தாரிசுவின் மகன் |
| க.கணபதிப்பிள்ளை | துட்டாங்காணி |

## அக்காலத்தில் மாட்டு வண்டிலில் பொருட்கள் ஏற்ற உதவியவர்கள்

| | |
|---|---|
| வ.கந்தையா | பெருந்தெரு |
| க.இராமலிங்கம் | (சிவலை இளையதம்பி) |
| இளையதம்பி | கறுவல் |
| கிட்டினபிள்ளை | மாவடி |
| க.கணபதிப்பிள்ளை | துட்டாங்காணி |

**********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்கன் யாகத்தில் தேவர்கள் அறுசுவை உணவுடன் ஆட்டுக்கறியினையும் உண்டார்கள்.

தக்கன் என்பவன்யார், அசுரனுமல்ல, அரக்கனுமல்ல, இராட்சதனுமல்ல, தேவலோகப்பிராமணன், சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமனின் புத்திரன் பிரமபுத்திரனான தக்கன் சிறந்த சிவபக்தன். சிவனைக் குறித்துத் தவம் செய்து பல அரிய வரங்களைப் பெற்றவன். அவ்வரங்களில் ஒன்று உமையம்மையார் தனது மகளாகப் பிறக்கவேண்டும். வளர்ந்துவரும் காலத்தில் சிவன் தன் மகளை மணம்புரிந்து கொள்ள வேண்டும் என்பதாகும். இவ்வாறு உமையம்மையார் தட்சாயினி என்னும் பெயரில் தக்கன் மகளாக வளர்ந்து வரும் காலத்தில் தக்கன் மனத்தில் ஆணவம் அதிகமாயிற்று. நான் பெரியவன், சிவன் என்மகளை மணக்க வருவார். அப்போது சிவன் எனது மருமகன் சிவனைவிட நான் உயர்வானவன் என்னும் ஆணவச் செருக்கினால் அறிவு மங்கிய நிலையில் திருமணவிழாவிற்கு ஏற்பாடு செய்தான் தக்கன். நிலைமையை உணர்ந்த எம்பெருமான் திருமணவிழா நிகழும் முன் உமை யம்மையாரை அழைத்துச் சென்றுவிடவே இந்நிகழ்வினால் ஆத்திரமுற்ற தக்கன் சிவநிந்தை செய்யும் சிவத்துரோகியானான். எம்பெருமானை வெறுப்பவன் ஆனான்.

இவ்வாறு சிவனை இகழும் நிலையில் எம்பெருமானை சிவனை விலக்கி யாகம் செய்யும் படி தேவர்களைப் பணித்தான். தேவர்கள் இதற்கு இணங்கி யாகம் செய்தலைத் தவிர்த்து ஒதுங்கினார்கள். இதனை உணர்ந்ததக்கன் தானே முன்நின்று சிவனைவிலக்கி, எம்பெருமானுக்குரிய நிவேதனப் பொருளை வழங்காது யாகம் செய்யலானான் இந்நிகழ்வுகளை திருவாதவூரடிகள் என்றும் மாணிக்கவாசகர் என்றும் போற்றப்படும் அருள்மொழித்தேவர் என்னும், அந்தணப்பெருமகனார் தாமருளிய திருவாசகத்தில் திருச்சதகம் என்னும் நூறுபாடற்தொகுப்பில் எட்டாவது பாடலிலே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"சவாமுன்னாள் தக்கன்வேள்வித் தகர்நின்று நஞ்சமஞ்சி
ஆவ எந்தாய் என்று அவி தாவிடும் நம்மவர் அவரே
மூவரென்றே எம்பிரானொடும் எண்ணி விண்ணாண்டு மண்மேல்
தேவரென்றே இறுமாந்தென்ன பாவந் திரிதவரே"

முந்நாளிலே இறப்பு வரக்கூடிய நிலையில் வாழ்ந்து வந்ததேவர்கள் இறப்பு வந்தாலும் வரட்டும் நாம் இந்த விருந்துணவைத் தவறவிடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது. தக்கன் யாகத்தில் பங்கேற்று அவனால் வழங்கப்படும் அறுசுவை உணவுடன் ஆட்டுக் கறியையும் உண்டு மகிழ்வோம் என்று உண்டு மகிழ்ந்திருந்த வர்கள் சிவபெருமானால் உருவாக்கப்பட்ட வீரபத்திரப்பெருமானால் தண்டிக்கப்பட்டு யாகமும் அழிக்கப்பட்டு உயிரழிவு பெற்று பிரமா, விஷ்ணு தவிர்ந்த ஏனைய வர்கள் உயிர்வதை பெற்று உமையம்மையாரின் வேண்டுகோளின் படி மீளவும் உயிர் பெற்றெழுந்தனர். யாகசாலையில் அக்கினிக்கு இரையாகிய தக்கன் தலைக்குப் பதிலாக ஆட்டுத்தலை பொருத்தப்பட்டு தக்கனும் உயிர் பெற்றெழுந்தனன். பிரமபுத்திரனான தக்கன் பின்நாளில் தந்தையாகிய பிரமதேவரின் உபதேசம் பெற்று மனம் திருந்தியவனாய் மீண்டும் சிவபக்தனாகி சிவபூசை செய்து வந்தான். இப்பூசையின் பேறாக எம்பெருமானின் பூரண அருள்பெற்று சிவகணத்தலைவன் ஆயினான் இதுவே தக்கனின் வரலாறு ஆகும். இந்ததக்கன் சிவனை நிந்தித்து இகழ்ந்து சிவனை விலக்கி பிரமா விஷ்ணு இந்திராதி தேவர்களுடன் பூலோகப் பிராமணர்கள் முனிவர்கள் சகிதம் யாகஞ்செய்த போது சிவனுக்குரிய அவிப்பாகம் என்னும் நிவேதன உணவை வழங்காமையால் சிவனால் உருவாக்கி அனுப்பப்பட்ட சிவாம்சம் பொருந்திய வீரபத்திர உருத்திரரும் பத்திரகாளிதேவியும், தம்மால் உருவாக்கப்பட்ட பூதகண வீரர்கள் காளிக்கூட்டங்களுடன் சென்று யாகத்தை அழித்து, தேவர்கள் உயிரைப்பலி கொண்டனர்.

நாராயணப்பெருமான் தக்கன் அழிவுற்றபின் வீரபத்திரப் பெருமானுடன் பெரும் யுத்தம் செய்யலானார். அப்போது பிரமதேவர் வீரபத்திரப்பெருமானைப் பணிந்து வணங்கி பெருமானின் கோபத்தைத் தணிவித்து பெருமானின் தேர்ச்சாரதியாயினார். வீரபத்திரப் பெருமான் கோபமுற்று நாராணயப் பெருமானை உக்கிரமாகத்தாக்கி அழிக்க எண்ணும் போது எம்பெருமானாகிய சிவனின் அசரீரி வாக்கு எழுந்தது வீரபத்திரப் பெருமானும் கோபம் தணியப்பெற்று சாந்த சொரூபியானார். அக்கணம் எம்பெருமானாகிய சிவன் சக்தி சமேதராய்க் காட்சி கொடுத்தார். உமையம்மையாரும் சினம் தணியப்பெற்று உயிரிழந்தவர்களை உயிர்ப்பித்தருளும் படி வேண்டினர், சத்தியன்னையின் விருப்பப்படி எம்பெருமானாகிய சிவன் தம்மை வணங்கி நிற்கும் வீரபத்திரப்பெருமானைப் பார்த்து யாகசாலையில் உயிரிழந்த அனைவரையும் உயிர்பெற்றெழும் வண்ணம் செய்வாயாக என்று கட்டளையிட்டார். அக்கணமே யாவரும் துயில்நீங்கி எழுபவர்கள் போல உயிர்பெற்று எழுந்தனர். பிரமாவானவர் தனது மகனான தக்கனைக் காணாதவராகி எம்பெருமானை வேண்டுதலும் சிவனாணைப்படி யாகத்திற் பலியிட்ட ஆட்டுக்கடா ஒன்றின் தலையைத் தக்கனின் உடலிற்பொருத்தி வீரபத்திரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானால் ஆட்டுத்தலையுடன் உயிர்பெற்றெழுந்த தக்கன் பயபக்தியுடன் ஆணவம் நீங்கப்பெற்று நாணிக்கோணி சிவபக்தன் ஆயினான்.

திருவாதவூரடிகள் இந்நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டுவது போல மேற்கூறிய திருவாசகப் பாடலைப் பாடியுள்ளார். **சாவமுன்னாள் தக்கன் வேள்வித்தகர்தின்று:–** முன்னொரு காலத்திலே சாவு என்னும் இறப்பு வரக்கூடிய நிலையில் வாழ்ந்து வந்த தேவர்கள் தக்கனானவன் செய்த யாகத்தில் யாகத்திற்குத் தலைவனான சிவனை இகழ்ந்து, வெறுத்து ஒதுக்கி செய்கிறான் என அறிந்தும் அந்த யாகத்திற் பங்கேற்று, அவனால் வழங்கப்பட்ட அறுசுவை உணவுடன் ஆட்டுக்கறியினையும் உண்டார்கள் என்று பாடுகிறார். தகர் என்பதும், அஜம் என்பதும் மேடம் என்பதும் வடமொழிச் சொற்களாகும். இதனை நாம் தமிழில் ஆடு என்கிறோம். இவ்வாறு ஆட்டுக்கறியினைத்தக்கன் யாகத்திலே நின்ற தேவர்கள். பின்னாளில் நாம் சாகாதிருக்க வேண்டும் என்பதற்காக தேவாஅமிர்தம் பெறுவதற்காக, அசுரர்களையும் துணைக்கு அழைத்து பாற்கடலைக்கடைந்தார்கள்.

மந்தரமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் தேவர்கள் ஒருபக்கம் அசுரர்கள் ஒரு பக்கமாக நின்று நீண்டகாலமாகக் கடைந்த போது வாசுகியாகிய பாம்பு வலிபொறுக்கமுடியாமற் கக்கிய நஞ்சு ஆலகால விஷமாக எங்கும் பரவியது. முன்நின்ற திருமாலின் மேனியை நீலநிறமாக்கித் தொடர்ந்து வந்த ஆலகால விஷத்தைக் கண்டு எல்லோரும் திசைதெரியாது ஓடினர் எம்பெருமானாகிய சிவனைத்தஞ்சம் புகுந்தனர். எம்பெருமானாகிய சிவபெருமான் அந்த ஆலகால நஞ்சினை ஒடுங்கச் செய்து ஒன்று திரட்டி உட்கொண்டு கண்டத்தில் அடக்கி நீலகண்டன் ஆயினர். இவ்வாறு திருநீலகண்டப் பெருமான்தேவர்களைக் காக்கவும் உலகம் உய்யவும் நஞ்சினை உட்கொண்ட தியாகேசர் ஆனார். தியாகராசப் பெருமானால் உலகம் உய்வு பெற்றது.

தக்கன் வேள்வியில் ஆட்டினை உண்டவர்கள், பின்னர் பாற்கடல் நஞ்சினுக்குப் பயந்தவர்கள் நம் மனிதர்களைப் போல உணவிற்காக ஆசைப் பட்டார்களே. நாம் சிவனையும் சேர்ந்து மூவர் எனப்போற்றப்படுகிறோம். படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய மூவகைத் தொழிலையும் புரிகிறோம். மும்மூர்த்திகள் நாங்கள் பிரமா, விஷ்ணு, உருத்திரன் எனப்பெயர் பெற்று இறுமாப்புடன் இருந்தாலும் இத்தேவர்கள் தக்கனுடைய யாகத்திலே கலந்து கொண்டார்கள் என்கின்ற பாவத்தைச் செய்யலாமா? சைவ மதத்தினர் உண்ணக்கூடாத புலால் உணவாகிய ஆட்டுக்கறியை உண்ணலாமா என வினவுகின்றார். திருவாதவூரந்தணர். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று கச்சியப்ப சிவாச்சாரியாரும் தாம் பாடிய கந்தப்புராணச் செய்யுள் 10345ல் கடவுள் வாழ்த்துப் பாடலில் வீரபத்திரப் பெருமானின் பாடலில் பின்வருமாறு கூறி வைத்துள்ளார். அப்பாடலையும்

நாம் இங்கு ஊன்றி நோக்குவோம் அப்பாடல் இதுவே.

"அடைந்தவி உண்டிடும் அமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமகம் ஒடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவோம்"

இப்பாடலைப் பிரித்துப்பொருள் அறியும் போது இவ்வகையாகப் பிரிக்குக.

<u>அடைந்து அவி உண்டிடும் அமரர் யாவரும்</u> – தக்கனின் வேள்விச்சாலையை அடைந்து அந்த யாகத்தைச் சிறப்புற நிகழ்த்தி தக்கனால் வழங்கப்பட்ட அவி என்னும் அறுசுவை உணவை உண்டு சுவைத்து மகிழ்ந்த தேவர்கள் எல்லோரும் <u>முடிந்திட</u> தேவர்கள் அனைவரும் இறந்து ஒழியும் படியும், <u>வெருவியே முனிவர் வேதியர் உடைந்திட :</u> தேவர்கள் யாவரும் இறந்துள்ளமையைப் பார்த்து அந்த யாகசாலையில் இருந்த முனிவர்களும் பிராமணர்களும் பயந்து நடுநடுங்கித்திசை தெரியாது ஓடி ஒழிந்து கொள்ளவும், <u>மாமகம்ஒடிய</u> தக்கன் என்பவன் சிவனை மதிக்காது செய்த அந்த யாகம் அழிவுறும் படியும், <u>தக்கனைத் தடிந்திடுசேவகன்:</u> பிரமபுத்திரனான சிவத்துரோகிதக்கனை வதைத்து அழித்த சிவனால் ஏவப்பட்ட சிவாம்ஸம் பொருந்திய உக்கிர மூர்த்தியான சிவனின் ஏவலாளன் வீரபத்திர உருத்திரேசப் பெருமான்.

<u>சரணம் :</u> அப்பெருமானின் திருவடிகளே சரணம் என்று சரண் புகுவோம். <u>போற்றுவோம்.</u> அப்பெருமானைப் பணிந்து துதித்துப் போற்றி மகிழ்வோம் என்று கச்சியப்ப சிவாச்சாரியார் பாடிப்பணிந்தவாறு நாமும் உருத்திரமூர்த்தியான வீரபத்திர ஈஸ்வரப்பெருமானைப் பணிந்து சாந்தமூர்த்தியாக, சிவபெருமானாக பெரியதம்பிரானாக வணங்கி உய்வடைவோம் <u>ஆகுக.</u>

<u>வீரபத்திரேஸ்வரரின் அவதாரம் :</u> தக்கனின் ஆணவம் என்றும் அகம் பாவ நிலையை மாற்றி நல்வழிப்படுத்தும் நோக்கில் எம்பெருமானான சிவபெருமானால் உருவாக்கப்பட்ட உக்கிரமூர்த்தியான தெய்வமாகும். அப்பெருமானை நாம் சாந்தமூர்த்தியாக அடியவர்கெளியராக வணங்கி உய்வடைவோமாகுக.

ஓம் வீரபத்திர ஈஸ்வராயநம.

**<u>தொகுத்தவர் : ஆ. விநாயகமூர்த்தி</u>**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபரம்பொருளின் மறக்கருணை

சிவபரம்பொருளின் மறக்கருணையை நாம் வீரபத்திர வரலாற்றில் பார்க்கலாம். தவறுசெய்த தக்கனின் தலையை அறுத்து அவனுக்கான தண்டனையை வழங்கிய பின்னரும், கருணைகொண்டு அவனது உடலோடு ஓர் ஆட்டின் தலையைப் பொருத்தி மீண்டும் உயிர்பெற்றெழச் செய்கிறார் வீரபத்திரர்.

தமது தவறுக்கு வருந்திய தக்கன் சிவனைத் துதிக்கிறான். இப்பகுதி சமகம் என்ற பெயரில் வேதங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. இங்கு ஆட்டிற்கே உரிய 'மே' என்ற சப்தம் அதிகம் இடம்பெறுவதைக் காணலாம்.

பெரிய யாகங்களில் வசோர்த்தாரை எனும் கிரியையில் முக்கியமாக இந்த வேத மந்திரங்களையே பயன்படுத்துவது இன்றும் வழக்கமாயுள்ளது.

## குலதெய்வ நிலையில் வீரபத்திரர்

பாரதத்தில் குறிப்பிட்ட சில வகுப்பினர் தமது குலதெய்வமாக வீரபத்திரரைக் கொண்டுள்ளனர். தமிழ் நாட்டிலுள்ள குறும்பர் இன மக்களை இவ்வகையில் குறிப்பிடலாம். (இவர்கள் குறுமன்ஸ் எனவும் அழைக்கப்படுகின்றனர்)

இவ்வினத்தின் மூதாதையர்களான குடியப்பன், சம்புரிலியப்பன், தோராளியப்பன், கரிபீரப்பன் என்ற நான்கு சகோதரர்களும் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த போது அவர்களது ஆட்டு மந்தைக்குள் புகுந்த வீரபத்திரர் தக்கனது உடலுக்குப் பொருத்துவதற்காக ஒரு ஆட்டின் தலையை வெட்டி எடுத்தார். அ தைக்கண்டு பயந்த குறும்பர் சகோதரர்களுக்கு அவர் அருள்பாலித்து அவர்களது குலதெய்வமாக, காவல்தெய்வமாக இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயனாருடன் வீரபத்திரர்

ஐயனார் மற்றும் ஐயப்பன் ஆலயங்களில் கறுப்பன்சாமி முதலிய சிறுதெய்வங்களின் சிலைகளோடு வீரபத்திரர் சிலையும் மிகப் பெரிய அளவில் வைக்கப்பட்டிருப்பதைப் பல இடங்களில் காணலாம். இவ்வகையில் மிகப் புராதனமான சாத்தனார் என்னும் சாஷ்தா (ஐயனார்) வழிபாட்டுடன் வீரபத்திரர் வழிபாடு இணைக்கப்பட்டிருப்பதால் மிகத் தொன்மைக் காலத்திலிருந்து வீரபத்திரரும் ஒரு கிராமியத் தெய்வமாக, காவற் கடவுளாக வழிபடப்பட்டு வந்திருக்கிறார் எனத் தெரிய வருகிறது.

## வீரபத்திரர் மந்திரங்கள்

பிரபஞ்ச சார சங்கிரஹம் என்ற பழைய நூலில் முருகப் பெருமானுக்குரிய மந்திரங்களை அடுத்து வீரபத்திரப் பெருமானுக்குரிய பல மந்திரங்களையும் தொகுத்து வைத்திருக்கிறார்கள்.

## வீரபத்திரர் மூலமந்திரம்

"ஓம் ஹ்ரீம் ஹ்ரௌம் வீரபத்ராய அதிக்ரூராய ருத்ரகோப சம்பவாய ஸர்வ துஷ்ட நிவர்ஹணாய ஹ்ரீம்பட் ஸ்வாஹா"

## வீரபத்திரர் காயத்திரி மந்திரம்

"ஓம் வீரபத்ராய வித்மஹே சூலஹஸ்தாய தீமஹி
தந்நோ வீர ப்ரசோதயாத்"

## பத்திரகாளி காயத்திரி மந்திரம்


"ஓம் பத்தரகாளீ ச வித்மஹே சூலஹஜ்தாய தீமஹி
தந்நோ காளீ ப்ரசோதயாத்"

"ஓம் ஹேம வர்ணாய வித்மஹே
சூல பாசாயை ச தீமஹி
தந்நோ காளீ ப்ரசோதயாத்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபந்தம்



## சூடாமணி நிகண்டு தரும் வீரபத்திரரின் பன்னிரு நாமங்கள்

உக்கிரன் அழற்கண் வந்தோன்
உமைமகன் சிம்புள் ஆனோன்
முக்கணன் சடையோன் யானை
முகவனுக் கிளையோன் வில்லி
செக்கர்வான் திறத்தோன் குரோதன்
சிறுவிதி மகம் சிதைத்தோன்
மிக்கப் பத்திரைக் கேள்வன்
வீரபத்திரன் பேராமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரம் + கருணை

பத்திரமாக இருக்க வேண்டும். அது உடலுக்கும் உள்ளுணர்வுக்கும் பத்திரத்தைத் தருவதாக இருக்க வேண்டும். வீர உணர்வும் உடற்கட்டும் உடைய காப்பே வாழ்வை நீடூழி வாழவைக்கும். கோழைத்தனமும் பலவீனமும் உள்ள பக்தி நாத்திக வாதத்துக்குத் துணைபோகும். முரட்டுத் தனமும் பிடிவாதமும் உள்ள வீரம் அறிவை மழுங்கச் செய்துவிடும்.

விவேகமுள்ள வீரமும் கருணை நிறைந்த பக்திக் காப்பும் வேண்டும். பக்தியும் வீரமும் தடுமாறும்போது ஏற்படும் சூழ்நிலைதான் தற்காலம். முரட்டுத்தனமும் விதண்டாவாதமும் நிறைந்த சூழ்நிலையில் நாம் வாழ்கிறோம்.

எனவே வீரம் + கருணை நிறைந்த உறுதி

பத்திரம் + கருணை நிறைந்த பக்தி

இவை இரண்டையும் அளிக்க வீரபத்திரர் நமக்குத் துணையாக இருப்பார்.

– தவத்திரு பித்துக்குளி முருகதாஸ் –

## வீரபத்திரரும் ஆஞ்சநேயரும்

ருத்ரமூர்த்தியின் அம்சம் பெற்று விளங்கும் வீரமூர்த்திகளில் வீரபத்திரரும் ஆஞ்சநேயரும் சிறப்பானவர்கள்.

வீரபத்திரர் சிவ பரம்பொருளாகவே இருப்பவர். ஆஞ்சநேயர் ருத்ர சக்தியின் ஓர் அம்சமாகத் தோன்றியவர். மிகுந்த சிவபக்தியுடையவர். அவர் வீரபத்திரரை உபாசித்து ஞான உபதேசமும் வீர பராக்கிரமமும் பெற்றவர் என்பர்.

தமிழ்நாட்டில் உள்ள பல வீரபத்திரர் ஆலயங்கள் அனுமனோடு தொடர்புடையவை. தொண்டைநாட்டில் புகழ்பெற்று விளங்கும் வீரபத்திரத் தலம் அனுமந்தபுரம் என்றழைக்கப்படுகிறது. இங்கு ஆஞ்சநேயரின் ஆலயமும் சிறப்பாக உள்ளது.

– சிவமஞ்சரி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிலைப் படல்

**வீ**ரபத்திரருக்குரிய அலங்காரங்களுள் ஒன்று வெற்றிலைப் படல் நூற்றுவதாகும். வெற்றிலையை அடுக்கடுக்காகத் தைத்து மாலைபோல் சூட்டுவதுடன் பிரபையிலும் (திருவாசி) அடுக்கடுக்காக அமைப்பர். இதற்கு வெற்றிலைப் படல் என்று பெயர்.

அந்நாளில் போருக்குச் செல்லும் வீரர்களுக்கு மனைவியும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் வெற்றிலை பாக்கும் கொடுத்து "வெற்றியுடன் மீண்டும் வருக" என்று வாழ்த்தி அனுப்புவது வழக்கம். வெற்றிலை வெற்றிக்குரிய அடையாளப் பொருளாகும். வெற்றி இலையே வெற்றிலை ஆனதென்பர்.

வெற்றியைத் தரும் முருகனின் கைவேல் வெற்றிலை வடிவானதென்பதும் எண்ணத்தக்கது.

–சிவமங்சரி–

## ஈசனின் மூவகை வடிவங்கள்

**போ**கத் திருவடிவம், யோகத் திருவடிவம், வேகத் திருவடிவம் என மூன்று வகையான மகேஸ்வர வடிவங்களைச் சிவஞான சித்தியார் கூறுகின்றது.

போகியாய் இருந்து யிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோக முத்தி
உதவுதல் அதுவும் ஓரார்
வேகி ஆனாற்போல் செய்த
வினையினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடர் எல்லாம்
உம்பரின் ஒருவன் என்பர்

போகத் திருவுருவம் : கல்யாண சுந்தரர், உமாமகேஸ்வரர், சோமாஸ்கந்தர்

யோகத் திருவுருவம் : தட்சணாமூர்த்தி , பிட்சாடனர்

வேகத் திருவுருவம் : காமாரி , வீரபத்திரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ பத்ரகாளி அம்பிகா சமேத வீரபத்திரர் மான்மியம்

## தோற்றம் - புராண வரலாறுகள்

நான்முகப் பெருமானாகிய பிரமதேவருக்குப் புத்திரராகத் தோன்றிய தக்கன் என்பான் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்றான். அவனுக்கு நிறைந்த செல்வமும் அதிகார பலமும் கீர்த்தியும் உண்டாயின.

அவன் பெற்ற ஒரு வரத்தின் பயனாக உமாதேவியார் அவனுக்கு மகளாக அவதரித்தார். தக்கன் மகள் ஆகையால் தாட்சாயணி என்னும் நாமத்துடன் வளர்ந்து சிவனை நினைந்து தவம் செய்து அவரால் ஆட்கொள்ளப்பட்டு மீண்டும் சிவபிரான் இடப்பாகம் அடைந்தாள்.

சிவபிரான் தனது மருமகன்தானே என அகந்தைகொண்டான் தக்கன். தனது மகள் தாட்சாயணியையும் சிவபிரானையும் நிந்தித்து அவமதித்து அவர்களை விலக்கி ஒரு யாகம் செய்தான். அவிர்பாகத்தைச் சிவனுக்கு வழங்காமல் தவிர்த்தான்.

பெருங் கருணையாளர்களான சிவனும் உமையும் அவனைத் தண்டித்துத் திருத்தி நல்வழிப்படுத்த எண்ணினர்.

சிவபிரான் தமது கூறாக வீரபத்திர கடவுளையும் உமாதேவியார் தமது கூறாக பத்திரகாளி அம்மையையும் தோற்றுவித்துத் தக்கனுடைய வேள்வியையும் அழித்து அவனது அகங்காரத்தையும் போக்கும்படி கட்டளையிட்டு அனுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபத்திரக் கடவுளும் பத்திரகாளியம்மையும் சென்று தக்கன் வேள்வியை அழித்துத் தக்கனையும் அவனோடு சேர்ந்தவர்களையும் மறக் கருணையினால் திருத்தி நல்வழிப்படுத்தினார்கள்.சிவனை மறந்து அவரை மதியாமல் அவிர்ப்பாகம் பெறச்சென்ற அத்தனை தேவர்களையும் அவரவர் தகுதிக்கேற்பத் தண்டனைகள் வழங்கி நல்லறிவூட்டினர்.

சிவபிரான் தமது திருச்சடையிலொன்றை எடுத்து பூமியில் வீசியபோது அதிலிருந்து வீரபத்திரர் தோன்றினார் என்று அபிதான சிந்தாமணி கூறுகிறது.

சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரர் தோன்றினார் எனக் கந்தபுராணம் கூறுகின்றது.

பார்வதிதேவியின் கால் கொலுசிலிருந்து தெறித்து விழுந்த நவமணிகளில் தோன்றிய நவவீரர்களில் வீரபத்திரரும் ஒருவர் என்ற கருத்தும் புராணங்களிலுண்டு.

இதுவே வீரபத்திரர் , பத்திர காளியின் தோற்றமாகும். ஆகவே இவர்கள் சிவபிரானும் உமையம்மையாரும் கொண்ட அருள் மூர்த்தங்களே என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

**********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரபத்திரர் - பத்திரகாளி உறவுமுறைத் தொடர்பு

சிவபிரானின் புதல்வர் வீரபத்திரர் எனவும் உமாதேவியின் புதல்வி பத்திரகாளி எனவும் கொண்டு இவர்கள் எவ்வாறு தமக்குள் துணைவர்கள் ஆக முடியும் எனவும் இவர்களுக்குத் திருக்கல்யாணம் செய்யலாமா? என்றும் ஒரு சிலருக்கு ஐயங்களுண்டு.

இவ்விடயம் பற்றி நன்கு ஆராய்ந்து தத்துவார்த்த உண்மைகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.

விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், வீரபத்திரர் நால்வருமட் சிவகுமாரர்கள் எனக் கூறப்படுவது உபசார வழக்கே என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சிவனது நெற்றிக் கண்ணில் தோன்றிக் கார்த்திகைப் பெண்களார் வளர்க்கப்பட்டு உமையம்மையால் அன்போடு அள்ளி அணைத்து உருவாக்கப்பட்ட கந்தப் பெருமானைப்பற்றிக் கந்தபுராணத்தில் சிவபிரான் வாக்காக வரும் வார்த்தைகளை அவதானித்தால் இது தெளிவாகும்.

"ஆதலின் நமது சக்தி
அறுமுகன் அவனும் யானும்
பேதகம் அன்றாம்"

***********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரபத்திரர் வழிபாட்டின் தொன்மை

உலகின் ஆதி இலக்கியமாகிய வேதங்களில் வீரபத்திரர் வழிபாட்டுக் கூறுகளைக் காணமுடிவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். யஜூர் வேதத்தில் வீரபத்திரர் பற்றிய குறிப்புக்கள் சிலவற்றை அவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். தேவீ மஹாத்மியம், தேவீ பராக்கிரமம் முதலிய பழைமை வாய்ந்த நூல்களில் காளியைப்பற்றி நிறையவே காண முடிகின்றது.

மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் வீரபத்திரர் பற்றிக் காணப்படுகிறது. சிவமகா புராணத்திலும் ஸ்காந்தமகா புராணத்திலும் வீரபத்திரர் வரலாறுகள் இடம்பெறுகின்றன. ஸ்காந்தம் கூறும் செய்திகளைத் தமிழில் கூறும் கந்தபுராணம் வீரபத்திரரின் அருட் செயல்களை அற்புதமாக விபரிக்கிறார்.

விஷ்ணுபுராணங்களில் ஒன்றான ஸ்ரீமத் பாகவதத்திலும் தட்சயாகம் பற்றியும் வீரபத்திரரின் வீரச் செயல்களும் வர்ணிக்கப்படுகின்றன. பாகவதத்தை தமிழில் தந்த செவ்வைச் சூடுவார் என்னும் பெரும் புலவர் அவற்றை அழகாக எடுத்துரைக்கிறார்.

தக்கன் வேள்வி அழியவேண்டுமென பிருகு முனிவர் சாபமிட்ட செய்தியும் சிவபெருமான் தமது சடைமுடியைத் தரையில் அடித்தவுடன் அங்கிருந்து வீரபத்திரர் நெடிய உருவத்துடனும் தீப்போன்ற நிறத்துடனும் தோன்றினார் என்ற செய்தியும் அங்கே கிடைக்கின்றன. 'முக்கண் அடல் வீரன்' என அவர் கூறுவதன் மூலம் மூன்று கண்களுடன் தோன்றிய வீரபத்திரர் சிவாம்சமே எனத் தெளிவாகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் வீரபத்திரரை நாம் காணலாம். ஒட்டக்கூத்தர் என்ற பழம்புலவர் தக்க யாகப் பரணி என்ற நூலை இயற்றி யிருக்கிறார். இந்நூல் தக்கனின் யாகம் சிதைக்கப்பட்ட புராண வரலாற்றை இலக்கியமாக்கித் தருகின்றது. இந்நூலில் வீரபத்திரரின் வீரமும் வெற்றியும் அழகாக விபரிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்த மாதர்களின் அதிபதி வீரபத்திரரே. ஏழு கன்னிகைகளுடன் வீரபத்திரர் சென்று அந்தகாசுரனை அழித்தார் என்பதும் சிங்க உருக்கொண்டு நீலன் என்ற யானை உரு அரக்கனை அடக்கினார் என்பதும் மருத்துவாசுரன் என்பவனை அழித்தார் என்பதும் புராணங்களில் கிடைக்கின்ற தகவல்கள்.

வழமைபோல ஒருமுறை தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே போர் மூண்டபோது அசுரர்களின் வேண்டுதலுக்கிணங்க அவர்களது குலகுருவாகிய சுக்கிலாச்சாரியார் வீரமார்த்தாண்டன் என்னும் அசுரனைத் தோற்றுவிதது அனுப்பினார். அவனது கொடூரத்திலிருந்து தப்பமுடியாமல் தேவர்கள் சிவனிடம் முறையிட்டபோது அவர் வீரபத்திரரை அனுப்பி அவனை அடக்கினார் என்பது ஒரு வரலாறு.

சோழர் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் வீரபத்திரர் வழிபாடு விரவிக் கிடந்திருக்கிறது. தென்னகத்தின் பிற பகுதிகளான ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா, கர்நாடக மாநிலங்களிலும் ஏன் வங்காளத்திலும் கூட வீரபத்திரர் வழிபாடு பரந்துள்ளதை அவர்களின் நடனக்கலை வடிவங்கள் மூலம் உணரலாம்.

கேரளக் கதக்களியிலும் கர்நாடக யக்ஷ கானத்திலும் வங்காள சௌவி நடனத்திலும் வீரபத்திரர் இடம்பெறுகிறார்.

சோழர் காலக் கலை வடிவங்களில் மிக முக்கியமான சிற்பக்கலை வடிவங்கள் மூலமும் நாம் வீரபத்திரரைக் கண்டு மகிழ முடிகிறது.

## வீரபத்திரர் யந்திரம்

மந்திர சாத்திர நூல்களில் வீரபத்திரர் தனிச் சிறப்புடன் போற்றப்படுகிறார். அவர் ஆயிரம் திருமுகங்கள் கொண்டவராக இருப்பதுபோல அவரது யந்திரத்திலும் ஆயிரம் எழுத்துக்கள் இடம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபத்திரர் வழிபாட்டு முறைகளும் விரதங்களும்

**வீ**ரபத்திரருக்கு வெற்றிலை மாலையும் எலுமிச்சம்பழ மாலையும் சாத்துவது மரபு. இவற்றைச் சாத்தி நேர்த்தி வைத்து அது வெற்றி பெற்றதும் வடைமாலை சாத்துகின்றனர்.

வெற்றிலைப்படல் சாத்துப்படி தனிச்சிறப்பு வாய்ந்தது.

தும்பைப் பூவும் நந்தியாவர்த்தையும் வீரபத்திரருக்குப்பிரியமானவை. பொதுவாகவே சிவந்த பூக்களும் செஞ்சந்தனமும் அவருக்குப் பிரியமானவை.

பொங்கல், சுண்டல், பால், பழம் என்பனவும் புளிச்சாதம், எலுமிச்சைப்பழச் சாதம் என்பனவும் இவருக்குகந்த நிவேதனங்களாகும்.

ஆஞ்சநேயருக்குப் போலவே வீரபத்திரருக்கும் வெண்ணெய்க் காப்பு இடுகிறார்கள். அடியார்கள் வெண்ணெய் உருண்டைகளை உருட்டி வீரபத்திரர் திருமேனிமேல் வீசி அது உருகும் போது தமது துன்பங்களும் உருகி மறைந்து விடுவதாகப் பாவிக்கிறார்கள். அதி உக்ர தெய்வமானதால் அவரது உக்ரத்தைத் தணிப்பதற்காக வெண்ணெய்க் காப்பிடுவது பொருத்தமானதே.

இதே போல, பத்திரகாளிக்கு மஞ்சள் காப்பிட்டு வணங்கும் வழக்கம் உண்டு.

செவ்வாய்க்கிழமை விரதம் பொதுவாக வீரபத்திரருக்கு உகந்தது. சித்திரை மாத முதற் செவ்வாய்க்கிழமையில் இந்த விரதம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஐப்பசி மாத வளர்பிறை அஷ்டமி நாள் வீரபத்திரருக்கு உகந்த விரத நாளாகும். இந்நாளில் இவருக்குச் சிறப்பான விழாக்கள் நடத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபத்திரரும் தீர்த்தங்களும்

**வீ**ரபத்திரரும் பைரவரும் தீர்த்தங்களுக்கக் காவல் தெய்வங்களாக இருக்கின்றனர். குடந்தையில் மகாமகத் தீர்த்தத்தில் கலக்கும் கங்கை முதலான புண்ணிய நதிகளுக்குக் காவலாக கங்கை வீரபத்திரர் உள்ளார்.

வீரபத்திரர் அதியுக்ர வீரமூர்த்தியாக இருப்பதால் அவர் பார்வைக்கு நேராக குளம், கிணறு ஆகியவற்றை அமைப்பது வழக்கமாகும். அனுமந்த புரத்தில் சந்நிதிக்கு எதிரில் பெரிய குளம் அமைந்துள்ளது.

செம்பிய மங்கலம் வீரபத்திரர் ஆலயத்தில் மகாமண்டபத்தின் மையத்தில் பெரிய கிணறு உள்ளது.

பெரும் பேற்றில் காளிதேவிக்கு முன்பாக கிணறு உள்ளது. இப்படி அநேக தலங்களில் வீரபத்திரர் அலலது பத்ரகாளிக்கு முன்பாக தீர்த்தம் அமைந்திருப்பதைக் காணலாம்.

–சிவமஞ்சரி–

## வீரபத்திராசனம்

**உ**டலுக்கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியம் கொடுக்கும் ஆசனங்களில் ஒன்றுக்கு வீரபத்திராசனம் என்று பெயர். வீரமும் வெற்றியும் நல்கும் நமது தெய்வத்தின் பெயர் அந்த ஆசனத்திற்குப் பொருத்தமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம்

## வடுவாவத்தை

**மே**ற்படி ஆலயத்தில் திருப்பணி வேலைகள் ஆரம்பித்தவுடன் பல வழிகளிலும் உதவி வழங்கிய அனைவருக்கும், வசந்த மண்டப வேலைகள் மற்றும் வேலைகளை திறம்பட செய்து தந்த க.சதீஸ்கரன் ஆசாரியாருக்கும் மற்றும் திறம்பட வர்ண பூச்சு வேலைகள் செய்து தந்த கிருஸ்ணாதரன் அவர்கட்கும் மற்று வேலைகள் உரியநேரத்தில் முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும், கும்பாபிஷேகத்தை திறம்பட நடாத்தித்தந்த சிவாச்சாரியார்களுக்கும் மற்று சரீரத் தொண்டு புரிந்தவர்களுக்கும் மற்றும் இப்பெரு விழாவில் கலந்து கொண்ட யாபேருக்கும் வீரபத்திரர், காளி அருள் பாலிக்க வேண்டுவதோடு எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**இவ்வண்ணம்**
**வீ.சி.மூர்த்தி**
**ஆலய பரிபாலகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**அன்பளிப்பு: 300/=**

Printed By: SPM-PPD-0212260055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org